**செய்தி வெளியீடு எண்: 06** **நாள்: 23.01.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு ஆர்.என்.ரவி அவர்கள் நேதாஜி சுபாஸ் சந்திர போஸின் 125-வது பிறந்தநாளை முன்னிட்டு 23.01.2022 அன்று சென்னை, ஆளுநர் மாளிகையில் உள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு.ஆர்.என்.ரவி அவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125-வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (23.01.2022) சென்னை ஆளுநர் மாளிகையில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்திய சுதந்திரத்திற்காக, மாபெரும் வீரர் நேதாஜி அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் வியந்து போற்றினார். "எனக்கு இரத்தம் கொடுங்கள், நான் உங்களுக்கு விடுதலை தருகிறேன்" என்கிற நேதாஜியின் ஒப்பற்ற அறைகூவல் மற்றும் தலைமையின் கீழ், இளைஞர்களை இந்திய தேசிய இராணுவம் உட்பட இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர ஊக்கம் பெற்றனர். இதுவே நம் நாட்டு விடுதலைக்கும் வழிகோலியது.

"ஒரு நபர் தன் கொள்கைக்காக உயிரையும் துறக்கலாம். ஆனால் அக்கொள்கையானது, அவரது மரணத்திற்குப் பின்னர், ஆயிரம் உயிர்களில் பிறப்பெடுக்கும்" என்னும் நேதாஜியின் புகழ்பெற்ற மேற்கோள்களில் ஒன்றை மாண்புமிகு ஆளுநர் எடுத்துரைத்தார். நேதாஜியின் அறிவார்ந்த, ஆன்மிகம் சார்ந்த பாதையானது, நம் மக்கள் என்றும் நாட்டுப்பற்றிலும், தேசிய உணர்விலும் நாட்டிற்குச் சேவை செய்ய ஊக்கப்படுத்துவதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், சகோதரத்துவத்தை வலுப்படுத்தவும், நாட்டின் முன்னேற்றத்திற்கான நமது பார்வையை மேம்படுத்தவும் நமது இளைஞர்கள் மற்றும் மக்களை வலியுறுத்தினார். மேலும், நாடு முழுவதும் ‘சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா'வைக் கொண்டாடும் இத்தருணத்தில்,

‘எப்போதும் தேசம் முதலில்’ என்கிற நேதாஜியின் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக உறுதிமொழி எடுப்போம் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆளுநரின் முதன்மைச் செயலாளர், திரு.ஆனந்த்ராவ் வி.பாட்டில், இ.ஆ.ப., சென்னை ஆளுநர் மாளிகை உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு மண்ணின் வீர மைந்தனான நேதாஜியின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை - 22 ஓம்./-

நாள் : 23.01.2022 கூடுதல் இயக்குனர் (ம.தொ.)

**Press Release No :** **06** **Date: 23.01.2022**

**HON’BLE GOVERNOR OF TAMIL NADU THIRU R.N.RAVI PAID FLORAL TRIBUTE TO PORTRAIT OF NETHAJI SUBHAS CHANDRA BOSE ON HIS 125$^{TH}$ BIRTH ANNIVERSARY AT RAJ BHAVAN, CHENNAI ON 23.01.2022**

The Hon’ble Governor of Tamil Nadu, Thiru R.N.Ravi paid floral tribute to portrait of Nethaji Subhas Chandra Bose on his 125$^{th}$ birth anniversary at Raj Bhavan, Chennai today (23.01.2022).

The Hon’ble Governor hailed the extraordinary contributions rendered by Nethaji the great warrior for India’s independence. Under his outstanding leadership and call ” Give Me Blood and I Will Give you Freedom”, galvanized the youths to join National Freedom Movement Including the Indian National Army which eventually let to our freedom.

Hon’ble Governor added one of the famous quotes of Nethaji that as he said “One individual may die for an idea, but that idea will, after his death, incarnate itself in a thousand lives”. The richness of Nethaji’s intellectual and spiritual footprints are ever inspiring our people to the service of the Nation in the spirit of patriotism and Nationalism.

Hon’ble Governor urged the youths and the people of our country towards strengthening our fraternity and promoting our vision for Nation’s progress. He added that , while the country is celebrating Azadi Ka Amrit Mahotsav, Let us pledge today on this occasion to abide by Nethaji’s principle of ‘Always The Nation First’.

Thiru.Anandrao V.Patil, Principal Secretary to Governor, Senior officials and staff of Raj Bhavan, Chennai also took part in the function and paid floral tributes to the Brave Son of Soil.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 23.01.2022 Addl. Director (PR)